**கவனிக்க** .- *27.06.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* II *மற்றும் பகுதி* IV *(அ) ஆகியவை பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1870 - 2014 ජූලි මස 04 වැනි සිකුරාදා - 2014.07.04**

*1870 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 766 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 771 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூலை மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## ஹக்மன பிரதேச சபை

ஹக்மன பிரதேச சபையில் தற்போது வெற்றிடமாகியுள்ள கீழே குறிப்பிடப்படும் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்வதற்கு இவ்வறிவித்தலின்படி தகுதிவாய்ந்த மற்றும் ஹக்மன பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தர வதிவாளராகிய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதுண்டு.

| தொடர் இல. | பதவிப் பெயர் | வெற்றிடம் | மாதாந்த சம்பள அளவு | கல்வித் தகைமைகள் மற்றும் பயிற்சி |
|---|---|---|---|---|
| | வெளி வேலை கூலியாள் | 3 | 06/2006(IV) பொது நி. அ. சுற்றறிக்கை ரூபா 11,730-10×120-10×130-10×145-12×160-ரூபா 17,600 | குறைந்தளவில் 8 ஆம் தரம் /9 ஆம் ஆண்டு சித்தியடைந்திருத்தல் |

**சேவைக்கு அமர்த்தும் நிபந்தனைகள் :**

(1) இப்பதவி நிரந்தரம் மற்றும் ஓய்வூதியம் உடையதாகும் ;

(2) விதவைகள்/அநாதைகள் ஓய்வூதிய திட்டத்திற்கு உதவுதொகை செலுத்தவேண்டும் ;

(3) தெரிவு செய்யப்பட்ட ஊழியர்கள் பதவி 3 வருட பயிற்சி காலத்திற்கு உட்பட்டதாகும் ;

(4) இந்த ஆட்சேர்ப்பு அரச கொள்கைகளுக்கும் ஒப்பந்தங்களுக்கும் சுற்று நிரூபங்களுக்கும் மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிருவாகக் கோவையின் சுற்று நிரூபங்களுக்கும் நிதிக் கட்டளைகளுக்கும் தென் மாகாண சபையின் அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் தென் மாகாண சபையினால் அரசாங்க திணைக்களங்களினால் ஹக்மன பிரதேச சபையினால் காலத்துக்கு காலம் விதிக்கப்படும் வேறு கட்டளைகளுக்கும் மற்றும் கொள்கைகளுக்கும் சுற்று நிரூபங்களுக்கும் அனுசரித்து செயற்பட வேண்டும்.

(5) ஆட்சேர்ப்பின் பின் 3 வருடகாலத்தின் பின்னரே நிரந்தரம் தொடர்பாக கவனத்திற்கு எடுக்கப்படும்.

**விண்ணப்பிக்கப்படவேண்டிய முறை.**- இவ்வறிவித்தலில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க 12"×8" அளவிலான கடதாசியில் விண்ணப்பப்படிவத்தினை தயார் செய்து 2014, யூன் 07 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக "தலைவர், ஹக்மன பிரதேச சபை, ஹக்மன" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது நேரடியாக கொண்டுவந்து ஒப்படைக்கவும். விண்ணப்பங்கள் இடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவியை குறிப்பிடப்படல் வேண்டும். உரிய திகதிக்குப் பின் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள், பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் இரத்துச் செய்யப்படும். தற்போது அரச சேவையில்/மாகாண அரச சேவையில் சேவை புரியும் அலுவலர்கள், தங்களது விண்ணப்பப்படிவங்களை தாம் சேவைபுரியும் நிறுவனத் தலைவரூடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரத்துடன் கீழே குறிப்பிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும் :-

(1) பிறப்பு சான்றிதழ் ;

(2) கல்விச் சான்றிதழ் ;

(3) அடையாள அட்டையின் பிரதி ;

(4) வதிவினை உறுதிப்படுத்த கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொண்ட சான்றிதழ் (பிரதேச செயலாளரின் உறுதியுடன்)

(5) 3வருடங்களுக்கு மேற்பட்ட பயிற்சி/மின் கைத்தொழில் தொடர்பாக 1 வருட கால பயிற்சிச் சான்றிதழ் ;

(6) சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்.

**ஆட்சேர்க்கும் முறை :**

(1) உரிய தகுதிகளையுடைய அனைத்து விண்ணப்பதாரிகள் மத்தியிலும் சட்டபூர்வமான நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தொழிற்திறனை உறுதி செய்ததன் பலனைக் கொண்டு ஆட்சேர்ப்பு நடைபெறும். (உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(2) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது கோரப்படுகின்றபோது, வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பை தாமதமாக்குதல், மாற்றம் செய்தல் அல்லது இவ்வறிவித்தலை இரத்துச் செய்தல் ஆகிய அனைத்து அதிகாரங்களும் ஹக்மன பிரதேச சபையின் தலைவருக்கு உரியதாகும்.

சீ. ஜீ. எச். ஹல்பகே,
தலைவர்,
ஹக்மன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹக்மன,
2014, யூன் 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**ஹக்மன பிரதேச சபை**

வெளி வேலை ஊழியர் பதவிகளுக்கான விண்ணப்பம்

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
2. முதலெழுத்துகள் குறிப்பிடும் பெயர் :----.
3. தனியார் முகவரி :----.
4. (அ) பிறந்த திகதி :- வருடம் :---- மாதம் :---- திகதி :----.
   (ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :- வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
5. இலங்கைப் பிரசையா? அவ்வாறாயின் வம்சாவழி மூலமா அல்லது பதிவின் மூலமா? :----.
6. ஆண்/பெண் :----.
7. திருமணமானவரா?/திருமணமாகாதவரா? :----.
8. சித்தியடைந்த உயர் பரீட்சை :----.
9. வேலைத் திறன் :----.
10. தொழில் பயிற்சி :----.
11. நீதிமன்றம் மூலம் தண்டனைக்குட்பட்டுள்ளீரா ? :----.
12. அவ்வாறாயின் தண்டனையின் தன்மை :----.
13. தற்போது பிரதேச சபையில் சேவை புரிவதாயின் அது தொடர்பான விபரம் :----.

இந்த விண்ணப்பப்பத்திரத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் உண்மையானவை எனவும், அதில் எதுவும் பிழை இல்லை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். இந்த ஆட்சேர்ப்பு தொடர்பாக என்னால் தரப்பட்ட தகவல்கள் பிழையானது எனத் தெரிய வந்தால், எனது விண்ணப்பம் நிராகரிக்கப்படும் எனவும் சேர்த்துக்கொள்ளப்பட்டதன் பின் தெரியவந்தால் எந்தவித நட்டஈடுமின்றி எனது நியமனம் இரத்துச்செய்யப்பட்டு வேலையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் என நான் அறிந்து கையொப்பமிடுகின்றேன்.

---------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி :----.

7-24

**வலல்லாவிட்ட பிரதேச சபை**

பதவி வெற்றிடங்கள்

மேல்மாகாண மாகாண அரசாங்க சேவையில் வலல்லாவிட்ட பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்காக இவ் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகுதியுடைய வலல்லாவிட்ட பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வாழ்பவர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்பதாரர் இங்கு குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து, ''செயலாளர், வலல்லாவிட்ட பிரதேச சபை, மீகாஹதென்ன'' என்ற விலாசத்திற்கு 2014, யூலை மாதம் 18 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கவும்.

| தொடர் எண் | பதவி பெயர் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பளத்திட்டம் (மாதாந்தம்) | கல்வித்தகைமையும் ஆட்சேர்ப்பு முறையும் |
|---|---|---|---|---|
| 1 | சாரதி II தரம் | 1 | PL3-2006 A<br>ரூபா 12,470-10×130-10 ×145-10×160-12×170-ரூபா 18,860 | க. பொ. த. (சா/த) பரீட்சையில் இரண்டு அமர்வு களிற்கு மேற்படாத விதத்தில் திறமை சித்தி இரண்டுடன் ஆறு பாடங்கள் சித்தியடைந்திருத்தல் (ஒரு முறையில் குறைந்தபட்சம் 5 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)<br><br>**தொழிற் தகைமை :**<br>(1) தனியார்/வாடகைக்கார் மற்றும் மென்ரக வண்டி ஓட்டுதல் தொடர்பான மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப் பட்டுள்ள தேர்ச்சி தொடர்பான சான்றிதழ் பெற்றுள்ளமை (ஆட்சேர்ப்பு தினத்திற்கு மூன்று வருடங்களுக்கு முன் பெற்றிருத்தல் வேண்டும்)<br>(2) வாகன சாரதியாக மூன்று வருட அனுபவம் இருக்க வேண்டும்.<br>(3) பெருந்தெருக்கள் சட்டக்கோவை தொடர்பான சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.<br><br>**வேறு தகைமை**<br>(1) குறைந்தபட்ச உயரம் 5 அடிக்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>(2) இரவு, பகல் வேளைகளில் சிறந்த கண்பார்வை உள்ளவராக இருக்க வேண்டும். |
| 2 | காவற்காரர் | 1 | PL1-2006 A<br>ரூபா 11,730-10×120-10 ×130-10×145-12×160- ரூபா 17,600 | கல்விப்பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப் பட்ட பாடசாலையில் குறைந்தது ஐந்தாம் தரத்தில்/ஆறாம் ஆண்டில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.<br><br>**வேறு தகைமை**<br>(1) குறைந்தபட்ச உயரம் 5 அடிக்கு மேல் இருத்தல் வேண்டும்.<br>(2) இரவு, பகல் வேளைகளில் சிறந்த கண்பார்வை உள்ளவராக இருத்தல் வேண்டும். |
| 3 | வெளிக்கள தொழிலாளர் | 3 | PL1-2006 A<br>ரூபா 11,730-10×120-10 ×130-10×145-12×160- ரூபா 17,600 | கல்விப்பணிப்பாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப் பட்ட பாடசாலையில் குறைந்தது ஐந்தாம் தரத்தில்/ஆறாம் ஆண்டில் சித்தியடைதிருத்தல் வேண்டும். |
| 4 | சுகாதார தொழிலாளர் | 2 | PL1-2006 A<br>ரூபா 11,730-10×120-10 ×130-10×145-12×160- ரூபா 17,600 | கல்வித்தகைமை கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது. |

2. **தேவையான வேறு தகைமைகள்.-**

(1) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பதாரர் பரம்பரையாக அல்லது பதிவுசெய்யப்பட்ட இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(3) விண்ணப்பதாரர் வலல்லாவிட பிரதேச சபை அதிகார எல்லைக்குள் குறைந்தபட்சம் 5 வருடம் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும் ;

(4) சிறந்த நடத்தையுடைய மற்றும் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும் ;

(5) தண்டனை சட்டக்கோவையின் கீழ் நீதிமன்றத்தினால் குற்றவாளியாகி தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது ;

(6) அரச/உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபன சேவையில் இருந்து விலக்கப்பட்டவர் அல்லது அரச சுற்று நிரூபம் 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருத்தல் கூடாது ;

(7) வலல்லாவிட்ட பிரதேச சபை அலுவலகத்தில் தற்போது பதில் கடமையின் கீழ் சேவை செய்கின்ற சேவையாளர்களுக்கு முன் உரிமை வழங்கப்படும் ;

(8) விண்ணப்பதாரர் பதவியின் முன் குறிப்பிட்டுள்ள கல்வித்தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.

(9) **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்.-**

(1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும் ;

(2) விதவைகள்/அநாதைகள்/தபுதாரர் ஓய்வூதிய நிதிக்கு பங்களிப்பு செய்தல் வேண்டும் ;

(3) இப்பதவி மூன்று வருட நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டது;

(4) இவ் ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு மேலதிகமாக தாபன விதிக்கோவை ஒழுங்கு விதிகளுக்கும் நிதி பிரமாணத்திற்கும் அரச திணைக்கள கட்டளைகளுக்கும் மேல் மாகாண சபை/மேல் மாகாண அரச சேவை ஆணைக்குழு/ வலல்லாவிட்ட பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் வெளியிடுகின்ற ஒழுங்கு விதிகளுக்கும் கட்டளைகளுக்கு ஏற்ப கீழ்படிந்து செயலாற்ற இணங்க வேண்டும்.

3. **விண்ணப்பிக்க வேண்டிய முறை.-** (1) இவ்வறிவித்தலில் உள்ள மாதிரி படிவத்தைப் போல் (12" × 8" அளவில்) விண்ணப்பப்படிவத்தை தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்ட கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் எழுதி 2014 யூலை மாதம் 18 ஆந் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

(தற்போது மாகாண அரச சேவையில் இருக்கும் விண்ணப்பதாரிகள் தனது விண்ணப்பப்படிவத்தை நிறுவன தலைவர் மூலம் அனுப்ப வேண்டும்) குறித்த திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பப்படிவம் மற்றும் முழுமையற்ற விண்ணப்பப்படிவங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(2) விண்ணப்பப்படிவத்தோடு பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்புவதோடு நேர்முகப் பரீட்சையின் போது மூலப்பிரதிகள் சமர்ப்பிக்க வேண்டும் :-

* பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் ;
* கல்விச் சான்றிதழ் ;
* தனது வதிவிடத்தை நிரூபிப்பதற்காக பிரதேச செயலாளரின் கையொப்பமிடப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;
* நன்நடத்தை சான்றிதழ் இரண்டு (ஒன்று கிராம அலுவலரிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்) ;
* தொழில் அல்லது அனுபவம் தொடர்பான சான்றிதழ் இருப்பின் அச்சான்றிதழ் (அரச உள்ளூராட்சி சேவையில் உள்ளவர்கள் தனது விண்ணப்பப்படிவத்தை திணைக்கள தலைவர் மூலம் அனுப்பவும்)

(3) குறித்த தகைமைகள் உள்ள விண்ணப்பதாரி மாத்திரம் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

4. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை.-**

(1) விண்ணப்பதாரர்களுள் குறித்த தகைமையுடைய விண்ணப்பதாரிகளை ஒழுங்கமைத்து நேர்முக பரீட்சைக்கு உள்வாங்கி வெற்றிடத்தை நிரப்பப்படும்.

(2) இவ்விண்ணப்பம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்படுகின்றபோது மற்றும் ஆட்சேர்ப்பு தாமதமாக்குதல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது செல்லுபடியற்றதாக்குதல் அனைத்து அதிகாரங்களும் வலல்லாவிட்ட பிரதேச சபை செயலாளருக்கு உரித்தாகும்.

ஈ. ஏ. சாந்தலதா,
செயலாளர்,
வலல்லாவிட்ட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
வலல்லாவிட்ட,
2014, யூன் 13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வலல்லாவிட்ட பிரதேச சபை**

மேல் மாகாண அரச சேவையில் .......................... பதவிக்கான விண்ணப்பம்

1. (i) முதலெழுத்துடன் பெயர் :-----.
   (ii) முதலெழுத்துக்கள் குறிப்பிடும் பெயர் :-----.
2. (i) நிரந்தர விலாசம் :-----.
   (ii) நிரந்தர வதிவு மாவட்டம் :-----.
3. (i) பிறந்த திகதி :- ஆண்டு :----- மாதம் :----- திகதி :-----.
   (ii) 2014, யூலை 18 ஆந் திகதிக்கு வயது :- வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.
4. ஆண்/பெண் :-----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----.
6. நீர் இலங்கைப் பிரசையா? :-----.
   அவ்வாறாயின் (பரம்பரையா ? அல்லது பதிவு செய்ததிலா ? என்பதை குறிப்பிடுக.) :-----.
7. கல்வித் தகைமை :- (சித்தியடைந்த பரீட்சை தொடர்பான விபரம்) :-----.
   (i) சித்தியடைந்த ஆண்டு/தரம் :-----.
   (ii) க. பொ. த. (சா./த.) பரீட்சை :-----.
   சுட்டெண் :-----. பரீட்சையின் வருடமும் மாதமும் :-----.

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

8. நீர் தற்போது பிரதேச சபையில் சேவை செய்பவராயின் அச்சேவைக் கால விபரம் :-----.
9. அனுபவமும் தொழில் தகைமையும் :-----.
10. நீர் என்றாவது குற்றச்சாட்டுக்காக நீதிமன்றத்தில் குற்றவாளியாகி உள்ளீரா? :-----.

இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும், சரியானதும் என உறுதிப்படுத்துகின்றேன். இங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானது என்று இப்பதவிக்கு தெரிவுசெய்யப்படுவதற்கு முன் தெரிய வந்தால் நான் தகுதியற்றவனாவேன் என்பதோடு தெரிவு செய்யப்பட்ட பின் தெரிய வந்தால் எவ்வித நட்டஈடுமின்றி பணியிலிருந்து விலக்க முடியும் என்பதையும் அறிவேன்.

-----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்காக நிறுவன தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பதாரராகிய திரு./திருமதி/செல்வி ................................................................. தற்போது இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ............................................................ ஆக பணிபுரிகின்றார். அவர் எவ்வித ஒழுக்காற்று தண்டனைக்கும் (அறிவுரை தவிர) உட்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதோடு, விண்ணப்பப்படிவத்தை விதந்துரை செய்து சமர்ப்பிக்கின்றேன்.

-------,
நிறுவன தலைவரின் கையொப்பம்.

பெயர் :-----.
பதவிப்பெயர் :-----.
திணைக்களம்/நிறுவனம் :-----.
(பதவி முத்திரை)
திகதி :-----.

7-26

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## ரம்புக்கனைப் பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2014.03.25 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபை அங்கீகாரம் பெறப்பட்ட முன்மொழிதலுக்கேற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எழுத்துமூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீல அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.*

பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்ட கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்ப அதிகாரம் இருப்பதாகவும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீல அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் அறிவிக்கின்றேன்.

ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,
தவிசாளர்,
ரம்புக்கனைப் பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ரம்புக்கனை,
2014, மே 16.

| வீதியின் விபரம் | - | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| | | 250 அடி | 06 அடி |

| | | |
|---|---|---|
| வீதியின் பெயர் | - | லெனபிட்டிய வயல் ஊடாகச் செல்கின்ற வீதி |
| கிராம அலுவலர் பிரிவு | - | பதவிகம்பல |
| ஆரம்பம் | - | லெனபிட்டிய |
| முடிவு | - | கஸ்கதுருகஹமுலவத்த |

பதவிகம்பல லெனபிட்டிய எனும் இடத்திலிருந்து ஆரம்பித்து இடப்பக்கமாக ஜே. பி. திஸாநாயக்க என்பவருக்கு உரித்தான லெனபிட்டிய வயலும்,

வலப்பக்கமாக ஜே. பி. திஸாநாயக்க என்பவருக்கு உரித்தான லெனபிட்டிய வயலில் எல்லையாவதுமான லெனபிட்டிய வயல் ஊடாகச் செல்கின்ற வீதி.

| வீதியின் விபரம் | - | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| | | 500 மீற்றர் | 2.04 |

| | | |
|---|---|---|
| வீதியின் பெயர் | - | மாவத்தகம பிரதான வீதியிலிருந்து எட்டம்பகஸ்தென்ன வரையிலான வீதி |
| கிராம அலுவலர் பிரிவு | - | பரப்பே (வடக்கு) |
| ஆரம்பம் | - | ரம்புக்கனை மாவத்தகம பிரதான வீதி |
| முடிவு | - | எட்டம்பகஸ்தென்ன கல்பிலேவத்த |

ரம்புக்கனை மாவத்தகம பிரதான வீதியில் ஆரம்பித்து இடப்பக்கமாக எம். டி. ஜே. எஸ். ரணசிங்ஹ மற்றும் அஷோக ஜயந்த தர்மதாஸ என்பவர்களுக்கு உரித்தான கல்பிலேவத்தவில் எல்லையாவதும்,

வலப்பக்கமாக ஏ. டி. சுனில் ஜயரத்தின என்பவருக்கு உரித்தான கல்பிலேவத்த காணியில் எல்லையாவதுமான எட்டம்பகஸ்தென்ன வரையிலான வீதி.

7-91/1

## ரம்புக்கனைப் பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் கேகாலை மாவட்டத்தில் ரம்புக்கனைப் பிரதேச சபையினால் 2014.04.29 ஆந் திகதி நடாத்தப்பட்ட பொதுக்கூட்டத்தில் சபை அங்கீகாரம் பெறப்பட்ட பிரேரணைக்கேற்ப ரம்புக்கனைப் பிரதேச சபை அதிகார எல்லையினுள் அமைந்துள்ள கீழே குறிப்பிடப்பட்டுள்ள வீதிகள் சம்பந்தப்பட்ட காணிச் சொந்தக்காரர்களினால் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட எழுத்து மூலமான விருப்பத்திற்கேற்ப ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீல அகலத்திற்கேற்ப சபைக்கு உரித்தாகின்றது என இத்தால் அறிவிக்கின்றேன்.*

*பிரதேசத்தில் வசிக்கின்ற பொதுமக்கள் இவ்வீதிகளை அகலமாக்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதாயின் அதற்கான காரணத்தினைக் குறிப்பிட்ட கடிதம் ஒன்றினை இரு பிரதிகளாக இவ்வறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினம் முதல் 30 நாட்களுக்குள் எனக்கு அனுப்ப அதிகாரம் இருப்பதாகவும், குறித்த கால எல்லையினுள் ஏதேனும் எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படாவிட்டால் அதன் பின் குறித்த வீதிகள் பிரதேச சபைக்கு உரித்தான சொத்தாகக் கருதி ஒவ்வொன்றிற்கும் எதிரேயுள்ள நீல அகலத்திற்கேற்ப கட்டுப்படுத்தப்படுமெனவும் அறிவிக்கின்றேன்.*

*ஈ. எம். ஏ. என். பி. ஹந்தகம,*
*தவிசாளர்,*
*ரம்புக்கனைப் பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*ரம்புக்கனை,*
*2014, மே 16.*

| வீதியின் விபரம் | - | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| | | 380 அடி | 12 அடி |

*வீதியின் பெயர் - கிரிதிகலவத்தஹேன வீதி*
*கிராம அலுவலர் பிரிவு - கடிகமுவ*
*ஆரம்பம் - ரம்புக்கனை கடிகமுவ பிரதான வீதி*
*முடிவு - கிரிதிகலஹேன வத்த*

*ரம்புக்கனை கடிகமுவ பிரதான வீதியில் ஆரம்பித்து இடப்பக்கமாக ஏ. எஸ். டீ. எம். சிட்னி கடிகமுவ, கே. ஏ. எம். பீ. பண்டார மற்றும் ஏ. எஸ். டீ. ஆர். சமிந்த சஞ்ஜய கடிகமுவ என்பவர்களுக்கு உரித்தான கிரிதிகலஹேன தோட்டத்தில் எல்லையாவதுமானதும்,*

*வலப்பக்கமாக எஸ். வீ. டி. நிரோஷா தமயன்தி, டீ. டபிள்யு. துலீகா ஹேமமாலி, ஏ. எஸ். டி. எம். ஆர். லலித் ரோஹன கடிகமுவ, ஏ. டபிள்யூ. ஏ. சந்திர காந்தி வணிகசூரிய, எஸ். டி. எம். எல். கே. திஸாநாயக மற்றும் ஆர். வீ. நந்தாவதீ என்பவர்களுக்கு உரித்தான கிரிந்திகலஹேனவத்த காணியில் எல்லையாவதுமான கிரிந்திகலஹேன வத்த வீதி.*

| வீதியின் விபரம் | - | நீளம் | அகலம் |
|---|---|---|---|
| | | 70 மீற்றர் (231 அடி) | 3.66 மீற்றர் (12 அடி) |

*வீதியின் பெயர் - ஹுரிமமுவ பொது ஒழுங்கை*
*கிராம அலுவலர் பிரிவு - ஹுரிமமுவ*
*ஆரம்பம் - ஹுரிமமுவ வீதி*
*முடிவு - வஸன்தா பிரியர்ஷனியின் வீடு*

*ஹுரிமமுவ வீதியில் ஆரம்பித்து இடப்பக்கமாக திரு. எம். எம். அஸாத் என்பவருக்கு, ஜீ. ஞானவதீ, ஆர். எச். என். ரணசிங்ஹமற்றும் டபிள்யூ. எம். வசந்தா பிரியதர்ஷனீ என்பவர்களுக்கு உரித்தான கஸ்கதுருகஹமுலஹேன, ரத்மலேஹேன, இம்புல்கஹமுலஹேன, தல்முகுனுவேஹேன எனும் ஒன்றிணைக்கப்பட்ட காணியில் எல்லையாவதும்,*

*வலப்பக்கமாக ஆர். ஏ. நந்தசேன, ஈ. ஜீ. குணதிலக, ஐ. பீ. கே. பீ. பெரேரா மற்றும் டபிள்யூ. எம். வசந்தா பிரியதர்ஷனி என்பவர்களுக்குச் சொந்தமான கஸ்கதுருகஹமுலஹேன, ரத்மலேஹேன, இம்புல்கஹமுலஹேன, தல்முகுனுவேஹேன எனும் ஒன்றிணைக்கப்பட்ட காணியில் எல்லையாகும் பொது வீதி.*

*7-91/2*

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**

**2013 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**

**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**

**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

**எல்லா வர்த்தமானிகளையும்** www.documents.gov.lk **எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும். தபால் அலுவலகம், "பொரல்லை" என்பதே மணி ஓடர்களுக்கான செலுத்தப்படும் அலுவலகமாகும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பெறப்படாமை, முகவரி மாற்றம் போன்ற எல்லாத் தொடர்புகளுக்கும், கொழும்பு 8, அரசாங்க அச்சுத் திணைக்களம், அரசாங்க அழுத்தகருக்கே எழுதுங்கள்.**

14. **2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்கு மான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 4,160.00 | 9,340.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 580.00 | 950.00 |
| III வது தொகுதி (ஆக்க உரிமை மற்றும் வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் முதலியன) | 405.00 | 750.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 890.00 | 2,500.00 |
| II ஆவது பகுதி (சட்ட சம்பந்தமானது) | 860.00 | 450.00 |
| III வது பகுதி (காணிகள்) | 260.00 | 275.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 2,080.00 | 4,360.00 |
| V வது பகுதி (பயண போக்குவரத்து சேவை முதலிய விண்ணப்பங்களுக்கான பட்டியல் மற்றும் புத்தகப் பட்டியல்) | 1,300.00 | 3,640.00 |
| VI வது பகுதி (யூரிமார் பெயர்ப்பட்டியல், வைத்திய அலுவலர் பட்டியல், பிறப்பு, இறப்பு பதிவாளர் பட்டியல் முதலியன) | 780.00 | 1,250.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**எல்லா தனிப்பிரதிகளையும் கொழும்பு 5, பொல்ஹேன்கொடை, கிருளப்பனை மாவத்தை, இல. 163 எனும் முகவரியிலுள்ள அரச வெளியீட்டு பணியகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

### அட்டவணை - 2014

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 04.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2014 |
| | | வெள்ளி | 11.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2014 |
| | | வெள்ளி | 18.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2014 |
| | | வெள்ளி | 25.07.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2014 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 01.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2014 |
| | | வெள்ளி | 08.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2014 |
| | | வெள்ளி | 15.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2014 |
| | | வெள்ளி | 22.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.08.2014 |
| | | வெள்ளி | 29.08.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2014 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 05.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2014 |
| | | வெள்ளி | 12.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2014 |
| | | வெள்ளி | 19.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.09.2014 |
| | | வெள்ளி | 26.09.2014 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2014 |

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.